இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 29.08.2026

# சூழலியல் அல்ல சூழ்ச்சியியல்!

பரந்தூர் விமான நிலைய ரத்து விவகாரத்தில் சூழலியல்வாதி பட்டத்தை தனக்குத் தானே சூட்டிக் கொள்கிறது த.வெ.க. அரசு. அவர்கள் சூழ்ச்சியியலையே செய்ய நினைக்கிறார்கள் என்பதை சட்டசபையில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு விட்டார் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா.

“பரந்தூர் விமான நிலையமா? விவசாயிகளின் கண்ணீரா என்றால் எங்கள் தலைவர் விவசாயிகளின் கண்ணீர் பக்கம் தான் நிற்பார்” என்று கனைக்கிறார் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா. **பரந்தூர் விமான நிலையத்துக்காக விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நிலங்கள் விவசாயிகளிடமே தரப்போகிறோம் என்று சொல்லி விட்டாரா முதலமைச்சர் விஜய்? இல்லை. இல்லவே இல்லை.**

**‘விவசாயிகள் பக்கம் நிற்பதற்காகவே நாங்கள் பரந்தூர் விமான திட்டத்தை ரத்து செய்திருக்கிறோம்’ என்று சொல்லும் த.வெ.க. அரசு, விவசாயிகளுக்காக என்ன செய்தியைச் சொல்லி இருக்கிறது? உங்கள் நிலம் உங்களிடமே வந்து சேரும் என்றா? முதலமைச்சர் அறிவிப்பிலும் விவசாயிகளுக்கு எந்த செய்தியும் இல்லை. அமைச்சர்கள் சொன்னதிலும் விவசாயிகளுக்கான எந்த அறிவிப்பும் இல்லை.**

“விரைவில் புதிய விமான நிலையத்துக்கான இடத்தை முதலமைச்சர் அறிவிப்பார்” என்று சொல்கிறார் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா. புதிய விமான நிலையம் அமைக்க 5 ஆயிரம் ஏக்கர் இடம் சென்னைக்கு அருகில் இருக்கிறதா? அந்த இடம் விவசாயிகளின் பயன்பாட்டில் இல்லாமல் இருக்கிறதா? விவசாயிகளிடம் இருந்து வாங்காமல் 5 ஆயிரம் ஏக்கர் இடத்தை ஒரே இடத்தில் அடையாளம் காணமுடியுமா? கோடிக்கணக்கான மக்கள் காதில் ‘லாட்டரி’ சுற்றுகிறார் ஆதவ் அர்ஜுனா.

**அமைச்சர்கள் யாருக்கும் இது ஒன்றிய அரசின் திட்டம் என்பதே தெரியவில்லை. இது ஏதோ மாநில அரசின் கட்டுப்பாட்டில் பேருந்து நிலையம் கட்டும் திட்டத்தைப் போல நினைத்துக் கொள்கிறார்கள். விமானநிலையம் என்பது ஒன்றிய அரசின் திட்டம். இடத்தை தேர்வு செய்வதும், ஒப்புதல் வழங்குவதும், விமானநிலையம் அமைப்பதும் ஒன்றிய அரசு தானே தவிர, மாநில அரசு அல்ல. இந்த குறைந்தபட்ச சிற்றறிவு கூட இல்லாமல், த.வெ.க. அமைச்சர்கள் பதில் அளிப்பதைப் பார்த்தால் எரிச்சல் தான் வருகிறது.**

பரந்தூர், பண்ணூர், திருப்போரூர், படாளம் ஆகிய நான்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டது. முதல் கட்ட பரிசீலனையில் திருப்போரூரையும், படாளத்தையும் ஒன்றிய அரசு நிராகரித்தது. பின்னர் பண்ணூரைவிட பரந்தூரே பொருத்தமானது என்று ஒன்றிய அரசு தேர்வு செய்தது. பரந்தூர் அமைந்தால் அதுதான் இந்தியாவில் மிகப்பெரிய விமான நிலையமாக இருக்கும். இது எதையும் தெரிந்து கொள்ளாமல் அமைச்சர்கள் விதண்டாவாதம் செய்கிறார்கள்.

‘சுற்றிலும் இடம் வாங்கிவிட்டார்கள்’ என்று சொல்வது எல்லாம் அமைச்சர்கள் சொல்லும் பதிலா? ‘ஒரு தனியார் நிறுவனத்தைச் சொல்லி அவர்களுக்கு அங்கு இடம் அதிகமாக இருக்கிறது. அவர்களுக்காகத் தான் தி.மு.க. பேசுகிறது’ என்கிறார் ஒரு அமைச்சர். அந்த நிறுவனம், ‘எங்களுக்கு ஒரு ஏக்கர் கூட இல்லை, இருக்கிறது என்று நிரூபித்தால் அதை இலவசமாகத் தருகிறோம்’ என்று உச்சந்தலையில் ‘நறுக்கு நறுக்கு’ என்று கொட்டி விட்டது. இதெல்லாம் த.வெ.க. அமைச்சர்களுக்கு உறைக்காது.

‘விவசாயிகளிடம் இருந்து பெற்ற இடத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?’ என்று முன்னாள் நிதி - தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கேட்ட கேள்விக்கு வாய்மூடி முதலமைச்சர் விஜய் எந்த பதிலையும் சொல்லவில்லை. எல்லாவற்றுக்கும் எழுந்து பதில் சொல்லும் ஆதவ் அர்ஜுனாவும் பதில் சொல்லவில்லை. ‘கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் குறித்து முதல் அமைச்சரிடம் ஆலோசித்து முடிவு பின்னர் அறிவிக்கப்படும்’ என்று மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல் குமார் சொல்கிறார்.

அடுத்த நிமிடமே தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா எழுந்து, “கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மாற்றித் தொழில் திட்டங்கள் மக்களைப் பாதிக்காதவாறு செயல்படுத்தப்படும். இதன் மூலம் தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். இரண்டாவது விமான நிலையம் வேண்டும். மக்கள் பாதிக்கப்படாமல் அது அமைக்கப்படும். ‘சிப்காட்’டும் மக்கள், விவசாயம் பாதிக்கப்படாத வகையில் தான் இருக்கும்” என்று சொல்லி இருக்கிறார்.

‘இன்னும் முடிவெடுக்கவில்லை’ என்கிறார் அமைச்சர் நிர்மல்குமார். ‘மாறுத் தொழில் திட்டம் செயல்படுத்தப்படும். சிப்காட் கூட வரலாம்’ என்கிறார் அமைச்சர் கீர்த்தனா. பரந்தூர் நிலத்தை வைத்து சூழ்ச்சியியல் நடத்துகிறார்கள் என்பது இதன் மூலமாகத் தெரிகிறது.

‘கையகப்படுத்தப்படுத்தப்பட்ட நிலத்தை வேறு எதற்கும் பயன்படுத்த முடியாது’ என்று முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சொன்ன போது, த.வெ.க. அரசின் முழுத்தந்திரமும் வெட்ட வெளிச்சம் ஆனது.

**“ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு கையகப்படுத்தப்பட்ட நிலம் சில காரணங்களால் செயல்படுத்த முடியாத நிலையில் மற்ற பொதுத் திட்டங்களுக்கு அரசு ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கிட சட்டங்களில் வழிவகை உள்ளது” என்று சொல்கிறார் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா. அப்படியானால் இவர்கள் தந்திரத்தோடு தான் முடிவு எடுத்துள்ளார்கள். விவசாயிகளுக்காக இல்லை. வேறு அரசியல் உள்நோக்கத்தோடு தான் த.வெ.க. அரசு இந்த திட்டத்தை ரத்து செய்துள்ளது.**

**விமானநிலையம் அமைக்க பெறப்பட்ட இடத்தில் விமானநிலையம் அமைக்கப்படப் போவதும் இல்லை. திட்டம் ரத்து செய்யப்பட்டதால் விவசாயிகளுக்கும் அந்த இடம் திருப்பி அளிக்கப் போவதும் இல்லை. மாற்றுத் திட்டம் என்ற பெயரால் நிலத்தை அப்படியே போடப் போகிறார்கள். எந்த தொலைநோக்குப் பார்வையுமற்ற அரசு பிற்காலத்தில் இந்த நிலத்தை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு கூட தாரை வார்க்கும் என்பதையும் மறுக்க முடியாது.**



கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.08.2026) சென்னை திருவான்மியூரில் அமைந்துள்ள ஸ்ரீராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற, நினைவில் வாழும் பி.எச். பாண்டியன் அவர்களின் பெயர்த்தியும், ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பி.எச். பால் மனோஜ் பாண்டியன் – திருமதி தீப்தி மனோஜ் பாண்டியன் இணையரின் மகளுமான நிரஞ்சனா பாண்டியன் – ஜே.பி. கிறிஸ்டோபர் சித்தாந்த் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி இல்லத் திருமண வரவேற்பு விழாவில் எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி, முன்னாள் அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர், பி.கே.சேகர்பாபு, டி.ஆர்.பி.ராஜா, பா.பென்ஜமின், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், ப.தாயகம் கவி, காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, டி.கே.எஸ்.இளங்கோவன், எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ், நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, ஒன்றியக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுச் செயல் சட்டம் 2024-

# ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புத் திட்டம் செயல்படுத்தியது திராவிட மாடல் அரசுதான்!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக.29-**

**சட்டப்பேரவையில் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்புத் திட்டம் செயல்படுத்தியது திராவிட மாடல் அரசு தான் என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**இது குறித்து சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-**



பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு நீங்கள் என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்துள்ளீர்கள் என்பதை தனது அறிவிப்பில் அமைச்சர் சொன்னார். எங்கள் உறுப்பினர் பேசும்போது, எங்கள் ஆட்சியில் நாங்கள் என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்துள்ளோம், உங்களின் ஆட்சியில் சில திட்டங்களுக்குப் பெயரை மாற்றியுள்ளீர்கள். சில திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவில்லை. அவற்றையெல்லாம் சரி செய்யுங்கள். ஆணவப் படுகொலை நடத்திருக்கிறது என்று புள்ளிவிவரங்களுடன் அவர் சொன்னார். இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

அமைச்சர் இங்கு தேவையில்லாத பிரச்னைகளை எழுப்பி, உங்கள் ஆட்சியில் நீங்களே இதைச் செய்யவில்லை. சி.ஐ.ஜெ.வில் இது குறைவாக உள்ளது.

இதையெல்லாம் நீங்கள் தவறாகச் செய்து விட்டீர்கள் என்று பதில் சொல்லும்போது தவறான பாதைக்கு இது சென்று கொண்டு இருக்கிறது.

நான் இந்த அவையில் பதியவைக்க விரும்புவது, ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புத் திட்டம் கொண்டு வந்தது எங்களின் ஆட்சியில்தான், எங்கள் திராவிட மாடல் அரசுதான்.

ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் `தொல்குடித் திட்டம்’, `அப்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின்’ மூலம் 36 லட்சம் ரூபாய் வரைக்கும் நிதியுதவி, மகளிரை நில உரிமையாளர் ஆக்கிட `நன்னிலம் திட்டம்’, சைதாபேட்டையில் 46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `எம்.சி.ராஜா மாணவர் விடுதி’, `ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்’, இப்படிப் பல்வேறு திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். இந்தத் திட்டங்களைப் பலமுறை அமைச்சர் அவர்களே பாராட்டியுள்ளார்கள். இந்த அவையில் அதை அவர் பதிய வைத்துள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி உரிய முறையில் செலவிடப்படுவதை உறுதி செய்யும் விதமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு செயல் சட்டம் 2024, அதை நிறைவேற்றம் செய்தது அப்போதைய எங்கள் முதலமைச்சர், எங்கள் திராவிட மாடல் அரசின் திட்டங்களை இங்கு பதிய வைக்க விரும்புகிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.



சென்னை, திருவான்மியூரில் நடைபெற்ற ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் பி.எச்.பால் மனோஜ் பாண்டியன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, மணமக்கள் நிரஞ்சனா பாண்டியன் – ஜே.பி.கிறிஸ்டோபர் சித்தாந்த் இருவரையும் வாழ்த்தினார்.